**cross**

**O.S. No.256/2017**

**Date:01.04.2025**

**வா.சா.2 செல்லம்மாள்**

**3 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என்னுடைய கொழுந்தன் மகன் ஆவார் என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கம் 3 ஆம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதியின் வீடு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் அந்த இடத்தில் உள்ளது என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதி வீடு கட்டிய பின்னர் தான் 3 ஆம் பிரதிவாதி கிழக்கு பக்கத்தில் வீடு கட்டினார் என்றால் சரிதான். வேல்த்தாய் வீடு கட்டிய விபரம் எனக்கும், வாதிக்கும் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். வாதிக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரிதான். இடத்தை அளந்த பிறகு வாதிக்கும், 3 ஆம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சினை முடிவுக்கு வந்ததா என்றால் இல்லை. நான் சொத்தை வாதிக்கு எழுதி கொடுத்த விபரம் 3 ஆம் பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து 3 ஆம் பிரதிவாதிக்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.